புதுமை

# இசையெனும் சித்திரம்!

மியூசிக் ஸ்பெஷல்

கடைசியாக நீங்கள் ரசித்துப் படித்து, மகிழ்ந்த புத்தகம் எது?

இந்தக் கேள்விக்கு பலரிடமும் பதில் இருக்க வாய்ப்பில்லை. எந்திர வாழ்க்கையில், எஞ்சும் மணித்துளிகளை வாசிப்புக்கு ஒதுக்கும் பெரிய மனது இங்கே அனேகம் பேருக்கு கிடையாது என்பதே உண்மை. அதிலும் சங்கீதம் சம்பந்தப்பட்ட புத்தகத்தைக் கையில் எடுக்க யாருக்கு இருக்கிறது பொறுமை?

சென்னையைச் சேர்ந்த எழுத்தாளர் லட்சுமி தேவ்நாத்தின் புதிய முயற்சி, இந்த இரண்டுக்குமே தீர்வாக அமைந்திருக்கிறது. கர்நாடக இசைக் குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வாழ்க்கையை, படக்கதையாக (காமிக்ஸ்) தொகுத்துப் புதுமை படைத்த லட்சுமி தேவ்நாத், அடுத்தடுத்த முயற்சிகளாக கர்நாடக இசை மேதைகள் ஜி.என். பாலசுப்ரமணியம் மற்றும் மதுரை மணி ஐயர் ஆகியோரின் வாழ்க்கைக் கதைகளையும் 'பிக்சர்ஸ் ஆஃப் மெலடி' வரிசையில் வெளியிட்டிருக்கிறார்!




லட்சுமி தேவ்நாத்

புத்தகத்தின் அட்டையே பக்கங்களைப் புரட்டச் சொல்கிறது. குழந்தைப் பருவத்தில் சித்திரக்கதை வாசித்த ஞாபகம் தலைதூக்க, புத்தகத்தை முழுக்க வாசித்து முடிக்கச் சொல்கிறது. யெஸ்... படக்கதைகள் குழந்தைகளுக்கு மட்டுமின்றி, பெரியவர்களுக்கும் சுவாரஸ்யம்தான்!

புத்தகத்துக்கான ஐடியாவை யோசித்தது முதல் அதில் இடம் பெறப் போகிறவர்களின் பட்டியலைத் தேர்வு செய்தது, அவர்களைப் பற்றி வருடக்கணக்கில் ஆய்வு செய்து, தகவல்கள் திரட்டியது, வடிவமைப்பைத் திட்டமிட்டு, அதற்கொரு உருவம் கொடுத்தது என 'பிக்சர்ஸ் ஆஃப் மெலடி' முழுக்க லட்சுமி தேவ்நாத்தின் ஒன் உமன் ஷோ!

எழுதத் தொடங்குவதற்கு முன், லட்சுமியும் ஒரு கர்நாடக இசைப் பாடகி, வீணைக் கலைஞர். சங்கீதத்தில் பட்டம் முடித்தவர். பாடுவதைத் தவிர்த்து, எழுத்தில் இவரது ஆர்வம் திரும்பியது ஏன்?

''ஒரு பக்கம் சங்கீத ஆர்வம் இருந்த மாதிரியே, இன்னொரு பக்கம் எழுத்தார்வமும் இருந்தது. ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகையில குழந்தைங்களுக்கான ஒரு பகுதி எழுதச் சொல்லிக் கேட்டாங்க. என்ன எழுதறதுன்னு யோசிச்சபோது, என்னோட சங்கீதப் பின்னணியை வச்சு, குழந்தைங்களுக்கு சங்கீதம் பத்தின தகவல்களை, கதையா சொன்னா என்னன்னு தோணினது. என்னதான் போரடிக்கிற சப்ஜெக்ட்டா இருந்தாலும், சொல்ற விதத்துல சொன்னா, சுவாரஸ்யப்படுத்தலாங்கிறது என் எண்ணம்.




3-4 லிட்டர் பாலைக் காய்ச்சினா, அவ்வளவு பாலோட சத்தும் சேர்ந்து, 1 கப் திரட்டுப் பால்ல கிடைக்கிறதில்லையா? அப்படித்தான் இந்தப் புத்தகங்களும்!

அம்மா, பொண்ணு, கூடவே அவங்களோட செல்ல நாய்க்குட்டின்னு மூணு கேரக்டர்களை உருவாக்கினேன். அந்தப் பெண் குழந்தையும், நாய்க்குட்டியும் லூட்டி அடிக்கிறதும், அதுக்கிடையில அந்தம்மா கதை சொல்லி முடிக்கிறதுமா எழுதின அந்தத் தொடருக்கு நல்ல வரவேற்பு. அந்தத் தொடர், 12-13 வயசுப் பிள்ளைங்க படிக்கிறதுக்காக எழுதினது. சின்னக் குழந்தைங்களுக்கு கர்நாடக சங்கீதத்தைப் பத்தி, நம்மளோட வாழ்ந்த கலைஞர்கள் பத்தி சொல்ல சரியான புத்தகங்கள் இல்லையேங்கிற ஆதங்கம் எனக்குள்ள இருந்தது. அப்பதான் இப்படியொரு புத்தகத்துக்கான ஐடியா வந்தது. குழந்தைங்களுக்கான புத்தகமாச்சே... அவங்களுக்குப் பிடிக்கிற மாதிரி இருக்கணுமேன்னுதான், படக்கதையா கொடுக்க முடிவு செய்தேன்...'' - வித்தியாச முயற்சிக்கான முதல் வித்து விழுந்த கதையுடன் பேச ஆரம்பிக்கிறார் லட்சுமி.

''சங்கீதம்னதும் முதல்ல நம்ம எல்லாருக்கும் ஞாபகத்துக்கு வர்றவங்க எம்.எஸ்.அம்மா. அதனாலதான் என்னோட முதல் புத்தகம் அவங்களைப் பத்தினதா இருக்கட்டும்னு முடிவு பண்ணினேன். அடுத்து 2010-ல ஜி.என்.பாலசுப்ரமணியத்தோட நூற்றாண்டு வந்தது. சங்கீத உலகத்துல அது ஒரு முக்கியமான நிகழ்வுங்கிறதால, அவரைப் பத்தி அடுத்த புத்தகத்தை ரெடி பண்ணினேன். 2012ல மதுரை மணி ஐயரோட நூற்றாண்டைக் கொண்டாடற வகையில இன்னொரு புத்தகம்...



இந்த எல்லா புத்தகங்களுமே வெறும் 24 பக்கங்கள்தான். சங்கீத ஜாம்பவான்களோட வாழ்க்கையை எப்படி இத்தனை சுருக்கமா கொடுக்க முடியும்னு நீங்க கேட்கலாம். 3-4 லிட்டர் பாலைக் காய்ச்சினா, அவ்வளவு பாலோட சத்தும் சேர்ந்து, 1 கப் திரட்டுப் பால்ல கிடைக்கிறதில்லையா? அப்படித்தான் என்னோட இந்த முயற்சிகளும். சம்பந்தப்பட்ட கலைஞர்களோட வாழ்க்கைல நடந்த முக்கியமான சம்பவங்கள் எதையும் மிஸ் பண்ணாம, பார்த்துப் பார்த்துத் தொகுத்தேன். புத்தகங்கள் குழந்தைங்களுக்கும் பெரியவங்களுக்கும் பிடிச்சுப் போனதுதான் எனக்குக் கிடைச்ச வெற்றி...'' என்கிற லட்சுமியின் அடுத்த முயற்சி லால்குடி ஜெயராமனின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பும், டி.பிருந்தாவின் நூற்றாண்டு விழாவை ஒட்டிய சித்திரக்கதைத் தொகுப்பும்!

''உலகம் முழுக்க கர்நாடக சங்கீதம் பரவியிருக்கிற மாதிரி, கர்நாடக சங்கீதக் கலைஞர்களோட வரலாறும் பரவணும். புத்தகம் வாசிக்க நேரமில்லாதவங்களையும் என் புத்தகங்கள் ஈர்க்கணும்...'' - லட்சியத்தோடு முடிக்கிறார் லட்சுமி.

- அதிதி

படங்கள்: வேணு